# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-சென்னை

(06.08.2016 முதல் 10.08.2016 வரை)

**கடந்த மூன்று நாட்களில் நிலவிய வானிலை (02.08.2016 முதல் 04.08.2016)**

சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் கடந்த மூன்று நாட்களாக வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது 4.1 மி.மீ அளவு மழை பெய்தது அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 33.0-36.0°C மற்றும் 25.0-29.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 64 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 10-19 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 06.08.2016 | 07.08.2016 | 08.08.2016 | 09.08.2016 | 10.08.2016 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0.5 | 0.5 | 1 | 2 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 15 | 15 | 15 | 15 | 15 |
| காற்று வரும் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 36 | 36 | 36 | 34 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 29 | 29 | 29 | 27 | 27 |
| ஈரப்பதம் | 50-55 | 50-55 | 50-55 | 55-60 | 55-60 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. 07.08.2016 முதல் 10.08.2016 ஆகிய நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. கால்நடைகளுக்கு நனைந்த வைக்கோல் மற்றும் இதர உலர் தீவனங்களை அளிப்பதை தவிர்த்து, உலர்ந்த பூஞ்சை காளான் இல்லாத வைக்கோல் அளிப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
3. கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
4. அடைப்பான் நோய் தாக்க வாய்ப்புள்ள பகுதிகளில் உழவர்கள் தங்களுடைய மாடு மற்றும் ஆடுகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
5. கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி,வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.
6. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
7. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. காய்கறி பயிர்களின் உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் 5 சதவித அளவு வேப்பங் கொட்டை கரைசலை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்
2. உழவர்கள் தற்போது வேர்கடலை பயிருக்கு களை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. கத்திரி பயிரைத் தாக்கும் குருத்து மற்றும் காய்த்துளைப்பானைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு எமாமெக்டின் பென்ஜொவேட் (Emamectin benzoate) 5 SG 200 கிராம் என்ற அளவில் பயன்படுத்திக் கட்டுப்படுத்தவும்.
4. நெல்லில் சிலந்திப் பூச்சியைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு டைகோ.்பால்(Dicofol)18.5 EC 1250 மிலி என்ற அளவில் தெளித்துக் கட்டுப்படுத்தவும்.

*திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த வேளாண் வானிலை தகவல் மையம்*
*மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறை,*
*சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை –600 007.*